

கன்னியாகுமரி மாவட்டம், வில்லுகுறி பேரூராட்சி மூட்டுவிளை பகுதியில் குடிநீர் விநியோக பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

செ.வெ.எண்: 903/2017

நாள்: 04.12.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. டி. கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள் கனமழை மற்றும் சூறைக்காற்றினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. டி. கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், கனமழை மற்றும் சூறைக்காற்றினால் பாதிக்கப்பட்ட, கன்னியாகுமரி மாவட்டம் வில்லுகுறி பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நிவாரண பணிகள் குறித்து இன்று (04.12.2017) அலுவலர்களிடம் கேட்டறிந்து, மூட்டுவிளை பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பணிகளை பார்வையிட்டு, பொதுமக்களிடம் குடிநீர் வழங்குதல் தொடர்பாக கேட்டறிந்தார். பின் குளுமைக்காட்டில் ஜெனரேட்டர் மூலம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றும் பணிகளை ஆய்வு செய்தார். அப்பகுதியில் மரங்கள் சாய்ந்து பாதித்த வீடுகளை நேரில் பார்வையிட்டார்.

மேலும், பத்மநாபபுரம் நகராட்சி அலுவலகத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் குடிநீர் விநியோகம் மற்றும் மின்சாரம் விநியோகம் குறித்து நகராட்சி ஆணையரிடம் கேட்டறிந்து, தக்கலை அரசு தலைமை மருத்துவமனை வளாகத்திலுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றும் பணிகளை பார்வையிட்டு, அங்குள்ள 21 வார்டுகளுக்கும் நேற்று முதல் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை கேட்டறிந்து மின் விநியோக பணிகள் 70 சதவீதம் நிறைவு பெற்றுள்ளதையும் கேட்டறிந்தார்.

பின்னர் கோழிப்போர்விளையில் உள்ள தக்கலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் நேரில் சென்று உதவி திட்ட அலுவலரிடம் அங்குள்ள 7 ஊராட்சிகளில் குடிநீர் விநியோக பணிகளை கேட்டறிந்து, திக்கணாங்கோடு ஊராட்சியில் ஜெனரேட்டர் மூலம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றும் பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பத்மநாபபுரம் நகராட்சி ஆணையர் திரு.கிருஷ்ண மூர்த்தி, ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் திருமதி.கல்யாண சுந்தரி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம

---